ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2302/33 - 2022 ඔක්තෝබර් මස 21 වැනි සිකුරාදා - 2022.10.21
2302/33 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

39 (அ) (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2018, பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதிய 2095/39 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிரசுரிக்கப்பட்ட 2018 ஆம் ஆண்டின் 289 ஆம் இலக்க கட்டளைக்கு உட்படுள்ள காணித் துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற் கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் அட்டவணை I இல் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/5/2017/HA/579.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல. : DS/GFG/L&L/4/82.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, ஒற்றோபர் 05.

### அட்டவணை I

தென் மாகாணம் காலி மாவட்டம், காலி கடவத் சதர பிரதேச செயலாளர் பிரிவில், மலிகஸ்பே (கவ 810019 வலயம் 1) கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2018.09.05 ஆந் திகதிய, GA/GFG/2018/512 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர்கள், விஸ்தீரணங்களைக் கொண்ட காணித் துண்டுகள் இரண்டின் எல்லைகள்:

**1. துண்டு 'B' – மஹகெதரவத்தஓவிட்ட, வரிமதிப்பீட்டு இல. 21/36, அனகாரிக தர்மபால மாவத்தை - விஸ்தீரணம் : 1.9920 ஹெக்டயார்**

வடக்கு : கடத்திரல் வரைபட இல. 810019 வலயம் 1, துண்டு இல. 105,104,111,112,125,126 மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு 'A' ; கிழக்கு : கடத்திரல் வரைபட இல. 810019 வலயம் 1, துண்டு இல. 125,126 மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு 'A', கடத்திரல் வரைபட இல. 810019 வலயம் 2, துண்டு இல. 83; தெற்கு: இந்த வரைபடத்தில் துண்டு 'C' மற்றும் கடத்திரல் வரைபட இல. 810019 வலயம் 1, துண்டு இல. 137; மேற்கு: கடத்திரல் வரைபட இல. 810019 வலயம் 1, துண்டு இல. 137 மற்றும் 176.

**2. துண்டு 'C' – வரிமதிப்பீட்டு இல. 21/37A - விஸ்தீரணம்: 0.6208 ஹெக்டயார்**

வடக்கு : கடத்திரல் வரைபட இல. 810019 வலயம் 1, துண்டு இல. 137 மற்றும் இந்த வரைபடத்தில் துண்டு 'B' ; கிழக்கு : கடத்திரல் வரைபட இல. 810019, வலயம் 2 துண்டு இல. 83; தெற்கு: கடத்திரல் வரைபட இல. 810019 வலயம் 1, துண்டு இல. 139; மேற்கு: கடத்திரல் வரைபட இல. 810019 வலயம் 1, துண்டு இல. 137.

EOG 10 -0186



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.